©
தமிழ்நாடு அரசு
2010

கையெழுத்துத் தொடர்

# நிதி (ஓய்வூதியம்)த் துறை

## அரசாணை எண் 2, நாள் 02.01.2010

*(மார்கழி–18, திருவள்ளுவர் ஆண்டு 2040)*

**பொங்கல் பண்டிகை, 2010** – ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.557, நிதி (ஓய்வூதியம்)த் துறை, நாள்: 30.12.2008.
2. அரசாணை (நிலை) எண்.1, நிதி (படிகள்)த் துறை, நாள்: 01.01.2010.

–––

**ஆணை:**

அரசு, அனைத்திந்திய பணி உட்பட, மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி மன்றங்களின் அனைத்துவகை தனி ஓய்வூதியதாரர்கள் உட்பட ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் கடந்த ஆண்டுகளில் ஒரு மொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ரூ.300/- என்று வழங்கப்பட்டு வந்துள்ளதை, தற்போது உயர்த்தி ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) வழங்கி ஆணையிடுகிறது.

2. இந்த ஆணை மேலே 1-ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள தற்போதுள்ள ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் அனைவருக்கும் பொருந்தும். இந்த பொங்கல் பரிசுத்தொகை, 02.01.2010 நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியிலிருந்து ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கும், 02.01.2010 நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியிலிருக்கையில் இறந்துவிட்ட பணியாளர்களின் குடும்பங்களுக்கும் அனுமதிக்கத்தக்கதல்ல.

3. 01.10.2008 முதல் 01.01.2010 வரையிலான கால அளவில் பணியிலிருந்து ஓய்வு பெற்றுள்ள / பணியிலிருக்கையில் இறந்துவிட்டவர்களைப் பொறுத்தவரையில், மேலே பார்வை 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் பிறப்பிக்கப்பட்ட ஆணையின்படி அவர்களுக்கு மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்பட்டிருக்குமேயாயின், அவர்களுக்கு இந்த பொங்கல் பரிசுத்தொகை வழங்க தகுதியுடையவர்கள் ஆகமாட்டார்கள். இதற்காக, இந்த ஓய்வூதியதாரர்களுக்குத் தொகை வழங்குவதற்குமுன், சம்பந்தப்பட்ட துறைகளிடமிருந்து தொகை வழங்கப்படவில்லை என்பது குறித்த சான்றிதழை பெறுமாறு ஓய்வூதியம் வழங்கும் அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

4. இந்த ஆணை பின்வரும் வகையிலான ஓய்வூதியதாரர்களுக்குப் பொருந்தாது:-

i) உலேமா உதவித்தொகைகள், மாநில சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான உதவித்தொகை பெறுபவர்கள், புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் சிறந்த மனிதர்களுக்கான சமூக உதவித்தொகைகள் போன்ற சிறப்பு ஓய்வூதியதாரர்கள்;

ii) பணியில் இருக்கும் பணியாளர்களுக்குப் பொருந்தக் கூடியவாறான மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் பெறுகின்ற கருணை அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள குடும்ப ஓய்வூதியதாரர்கள்.

**5.** ஓய்வூதிய முன்னோடித் திட்டத்தின்கீழ் வரும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில், பொங்கல் பரிசுத்தொகை வழங்குவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது:-

i) அரசு செலவில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பணவிடைமூலம் அனுப்பப்படுவதைப் பொறுத்தமட்டில், இந்த பொங்கல் பரிசுத்தொகையும் பணவிடைமூலம் அனுப்பப்பட வேண்டும்.

ii) ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியத்தை வங்கிகள் மூலம் பெறும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில்,

அ) பட்டியலுக்குத் தொகை அளிக்க காசோலை / மின்னணு (ECS) முறை செயலிலுள்ள சென்னை ஓய்வூதியம் வழங்கல் அலுவலகம், மாவட்ட கருவூலகங்கள் மற்றும் சார்நிலை கருவூலகங்களில், காசோலைகள் வெளியிட்டு அவற்றை தொகை செலுத்தும் சம்பந்தப்பட்ட வங்கிக் கிளைகளுக்கு அனுப்ப சென்னை ஓய்வூதியம் வழங்கல் அலுவலருக்கும், மாவட்ட கருவூலகங்கள் மற்றும் சார்நிலை கருவூலகங்களில் அலுவலர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது. அந்த காசோலைகளுடன், ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் சேமிப்பு வங்கிக் கணக்கில் தொகையை வரவு வைக்க அந்தந்த ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

ஆ) பட்டியலுக்கு தொகை அளிக்க காசோலை/ மின்னணு(ECS) முறை செயலில் இல்லாத வங்கிப்பணி வசதியுள்ள சார் கருவூலகங்களில் (Banking Sub-Treasuries) வங்கிக் கணக்குக் காசோலை / வங்கி வரைவுக் காசோலை எடுத்து அவற்றை ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் சேமிப்பு வங்கிக் கணக்கில் வரவு வைப்பதற்காக சம்பந்தப்பட்ட ஓய்வூதியம் வழங்கும் வங்கிக் கிளைகளுக்கு அவற்றை அனுப்பி வைக்க சார்நிலைக் கருவூல அதிகாரிகளுக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

இ) வங்கிப்பணி வசதியல்லாத சார்நிலைக் கருவூலங்களைப் (Non-Banking Sub-Treasuries) பொறுத்தமட்டில், பொங்கல் பரிசுத் தொகையைப் பெற்று, ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களின் சேமிப்பு வங்கிக் கணக்கில் தொகையை வரவு வைக்க, வங்கிகளின் சம்பந்தப்பட்ட தொகை செலுத்தும் கிளைகளுக்கு அவற்றை அனுப்ப ஏற்பாடு செய்ய சார்நிலைக் கருவூல அதிகாரிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

**6.** பொதுத்துறை வங்கித் திட்டத்தின்கீழ்வரும் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில், ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்கள் கணக்கில் நேரடியாக தொகையை வரவு வைக்க அனைத்துப் பொதுத்துறை வங்கிகளுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது.

**7.** மாநில நிதியிலிருந்து ஓய்வூதியம் வழங்கும் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில், இந்த செலவு “**2071.** ஓய்வூதியம் மற்றும் ஏனைய ஓய்வுகால பயன்கள் – **01.** சிவில் – **800.** ஏனைய செலவு - **I.** திட்டத்தில் சேராதது – **AF.** ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்குப் பொங்கல் பரிசு – **27.** ஓய்வூதியங்கள் – **09.** ஏனையவை (தகவல் தொகுப்பு குறியீட்டு எண் **2071 01 800 AF 2799**)” என்ற கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும். உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் கணக்கு வைத்துவரும் நிதி அல்லது நகராட்சி நிதிகளிலிருந்து ஓய்வூதியம் குறித்த செலவு செய்யப்படும் வகையிலான உள்ளாட்சி மன்றங்களின் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களைப் பொறுத்தமட்டில், இந்த செலவு மேலே குறிப்பிட்டுள்ளவாறான அந்தந்த நிதிகளிலிருந்து செய்யப்பட வேண்டும்.

**8.** மேலே அனுமதிக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகையை ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு உடனடியாக பெற்று வழங்க அறிவுறுத்தப்படுகிறது.

**9. 2009–2010** ஆம் நிதியாண்டில் சம்பந்தப்பட்ட கணக்கு தலைப்புகளின் கீழ் போதிய நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. எனினும், கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட கணக்கு தலைப்புகளின் கீழ் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் **2009–2010**–ம் நிதியாண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் சேர்க்கப்படும். அத்தகைய நிதியொதுக்கத்தினை எதிர்நோக்கி தேவையான தொகையினை செலவு செய்யலாம்.

**10.** இந்த ஆணை கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.**1392** (ஆயிரத்து முன்னூற்று தொன்னூற்று இரண்டு) உடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கு. ஞானதேசிகன்**
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
செயலாளர், சட்டமன்ற பேரவைச் செயலகம், சென்னை– 600 009.
ஆளுநரின் செயலகம், ராஜ்பவன், கிண்டி, சென்னை– 600 022.
அனைத்து செயலகத் துறைகள்.
சட்டப்பேரவைச் செயலகம், சென்னை– 600 009.
தமிழ்நாடு மாநில தகவல் ஆணையம், 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை–600 018.
அனைத்துத் துறைத் தலைவர்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை), சென்னை– 600 018. (பெயரில்)
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத்தொகை), சென்னை– 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-I), சென்னை– 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை-II), சென்னை– 600 018.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (CAB), சென்னை– 600 009.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை– 600 104.

செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை– 600 002.
மாநகராட்சி ஆணையர், சென்னை / மதுரை / கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் / மாவட்ட நீதிபதிகள் / முதன்மை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட்டுகள்.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை– 600 006.
அனைத்து சம்பள கணக்கு அலுவலர்கள்.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
அனைத்து துணைக் கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாநிலக் கழகங்கள் / நிறுவனங்கள்.
நகல் பெறுநர்:
நிதி (அ.ந.மு.I)/(அ.ந.மு.II)/(அ.ந.மு.III)/(அநமு.பல்வகை)/(ஓ.கு.தீ)/( ஊ.கு.)/(வரவு செலவு–பொது II) /(வரவு செலவு–பல்வகை)/(பொது)த் துறை, சென்னை– 600 009.
முதலமைச்சரின் தனிச் செயலாளர், சென்னை– 600 009.
ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை– 600 006.
முதன்மைச் செயலாளர்/ஆணையர், கருவூல கணக்கு ஆணையர், சென்னை– 600 015.
உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், சென்னை– 600 108.
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்.
இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை – 600 001 .
இந்திய ரிசர்வ் வங்கி, அரசு மற்றும் வங்கிக் கணக்குகள் துறை, மும்பை – 400 051 (75 நகல்கள்)
அனைத்து பொதுத் துறை வங்கிகளின் தலைமை அலுவலகங்கள் / மண்டல அலுவலகங்கள் (ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை – 600 006 அவர்கள் மூலமாக)
அனைத்து பொதுத் துறை வங்கிகள் (ஓய்வூதிய இயக்குநர், டி.எம்.எஸ். வளாகம், சென்னை – 600 006 அவர்கள் மூலமாக)
தலைவர், தமிழ்நாடு ஓய்வூதியர் சங்கம், டி.பி.ஐ. வளாகம், கல்லூரிச் சாலை, சென்னை– 600 006.
தலைவர், தமிழ்நாடு தலைமைச் செயலக ஓய்வுபெற்ற அலுவலர்கள் சங்கம், மேடவாக்கம் டேங்க் சாலை, கீழ்பாக்கம், சென்னை– 600 006.
தலைவர், அனைத்திந்திய ஓய்வுபெற்றோர் சங்கக் கூட்டமைப்பு, மேற்கு சைதாப்பேட்டை, சென்னை– 600 015.
தலைவர், ஓய்வுபெற்ற ஆசிரியர் சங்கம், எண் 12, அபயாம்பாள்புரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம்.
மாநிலத் தலைவர், அகில பாரத குடிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர் அமைப்பு, எண் 7, பாரதிதாசன் சாலை, அவினாசி, கோயம்புத்தூர் மாவட்டம்.
தலைவர், இந்திய அதிகாரிகள் சங்கம், எண் 35, திரு.வி.க. நெடுஞ்சாலை, இராயப்பேட்டை, சென்னை– 600 014.
தலைவர், தமிழ்நாடு முதியோர் குடியுரிமை பெற்றோர் சங்கம், எண் வி 95, அண்ணா நகர், சென்னை– 600 040.
தலைவர், தமிழ்நாடு முதுநிலை குடியுரிமை பெற்றோர் மற்றும் ஓய்வூதியர்கள் சங்கம், எண் 38–பி, பிரதான சாலை, பெருமாள்புரம், திருநெல்வேலி.
தலைவர், ஓய்வுபெற்ற அலுவலர் சங்கம், எண் 158, பெல்ஸ் சாலை, சென்னை– 600 005.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்கள்.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

ப. நாதாலிங்கம்
02/01/2010

பிரிவு அலுவலர்